

exyte

# CODE OF CONDUCT

COMPLIANCE
» The right way « exyte

# Speak Up!

It's the right way.

# CODE OF CONDUCT

## பொருளடக்க அட்டவணை


நிர்வாக சபையில் இருந்து செய்தி 05
01 | எங்கள் COMPLIANCE கலாச்சாரம் 06
02 | COMPLIANCE-க்கான பொறுப்பேற்றல் 08
03 | மக்கள் மீது அக்கறை 10
3.1 மனித உரிமைகள் 12
3.2 DIVERSITY 12
04 | தனிப்பட்ட தரவு 14
05 | நலன்களின் முரண்பாடுகள் 16
06 | நிறுவன வளங்கள் 18
6.1 சொத்துகள் 18
6.2 தரவு 18
07 | லஞ்சம் மற்றும் ஊழல் 20
7.1 எங்கள் பொது நிலைப்பாடு 20
7.2 வணிகக் கூட்டாளர்கள் 20
7.3 பொது அதிகாரத்தில் இருப்பவர்கள் 22
7.4 முகவர்கள் மற்றும் ஆலோசகர்களை ஈடுபடுத்துதல் 24
7.5 நன்கொடைகள் மற்றும் நிதியாதரவுக்கான விதிகள் 24
08 | நிதிசார் பதிவுகளில் மோசடி மற்றும் நேர்மைத்தன்மை 26
09 | நியாயமான விதிமுறைகளின் அடிப்படையில் போட்டியிடுதல் 28
10 | தடை நடவடிக்கைகள் மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாடு 30
11 | CODE OF CONDUCT-ஐ அமல்படுத்துதல் 32
உங்கள் தொடர்பு விருப்புரிமைகள் 35

# EXECUTIVE BOARD



**Dr. Wolfgang Büchele**
Chief Executive Officer



**Elena Bashkeeva**
Chief Financial Officer



**Mark Garvey**
Chief Executive Officer Advanced Technology Facilities

# நிர்வாக சபையிடம் இருந்து செய்தி

**அன்பார்ந்த சகப் பணியாளர்களே,**

நமது வணிகப் பகுதிகள் முழுவதிலும் மிக உயர்ந்த நன்னெறியான, ஒழுக்கமுள்ள மற்றும் சட்டப்பூர்வமான தரநிலைகளுக்கு இணங்க வணிகம் நடத்துவது நமது கார்ப்பரேட் கொள்கையாக உள்ளது.

அதாவது, முக்கியமான திட்டப்பணியை வெற்றிகொள்ள முடியாவிட்டாலும் அல்லது ஒரு வணிக இலக்கை அடைய முடியாவிட்டாலும் கூட அனைத்துப் பொருந்தக்கூடிய சட்டங்களுக்கும் ஒழுங்கு விதிகளுக்கும் இணங்கி நடப்பதை நாங்கள் தலையாயப் பணியாகக் கருதுகிறோம். ஆனாலும், Exyte-இல் Compliance என்பது இன்னும் ஆழமானதாகும். வணிகக் கூட்டாளர்களிடமும் சகப் பணியாளர்களிடமும் நாங்கள் நேர்மையுடனும் மரியாதையுடனும் நடந்துகொள்கிறோம். Exyte-இல், நேர்மையையும் நியாயமான வணிகத்தையும் விலையாகக் கொடுத்து வருவாயை அல்லது இலாபங்களை அதிகரிப்பதில் நாங்கள் வெளிப்படையாக எந்த ஆர்வமும் காட்டுவதில்லை.

உலகமயமாக்கலும் பெரும் சிக்கல் வாய்ந்த ஒழுங்குமுறைச் சூழ்நிலைகளும் Compliance-ஐ மென்மேலும் சவாலானதாக ஆக்குகின்றன. இந்தச் சவால்களைச் சமாளிக்க உதவ, Exyte Code of Conduct உங்கள் அன்றாட வணிகத்திற்கான வழிகாட்டுதலை வழங்குகின்றது. நமது Code of Conduct ஒரு கொள்கை என்பதை விடச் சற்று மேம்பட்டதாகும். இது நமது அனைத்து வணிக நடத்தையின் அடிப்படையாகவும், அளவீட்டுக்குறியாகவும் உள்ளது. ஒரேயொரு நிகழ்வாக இருந்தாலும் non-compliance தீவிரமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடும் என்பதையும், சந்தையில் Exyte ஈட்டியுள்ள உயர்வான நற்பெயருக்குச் சேதம் ஏற்படுத்தக்கூடும் என்பதையும் எப்பொழுதும் நினைவில் கொள்ளவும். நம் பங்குதாரர்கள் நமது நிறுவனத்தின் மீது வைத்திருக்கும் நம்பிக்கை நமது மிகவும் மதிப்பு வாய்ந்த சொத்தாக உள்ளது. இந்தச் சொத்தைப் பாதுகாப்பது என்பது நிறுவனத்தில் நமது பதவி மற்றும் பணிப்பொறுப்புக்கு அப்பாற்பட்டு நாம் அனைவரும் பகிர்ந்துகொள்கின்ற ஒரு பொறுப்பு ஆகும்.

நீங்கள் Exyte-இன் Code of Conduct-களைப் புரிந்துகொள்ள வேண்டும் என்றும், நடைமுறையில் அதைக் கடைபிடிக்க வேண்டும் என்றும் நானும் எனது நிர்வாக சபை சக உறுப்பினர்களும் எதிர்பார்க்கிறோம். நீங்கள் தேவைப்படும்போது உங்கள் கருத்தை தைரியமாக வெளிப்படுத்த வேண்டும் எனவும், நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் நாங்கள் ஊக்குவிக்கிறோம். ஏதேனும் தவறான நடத்தையை நீங்கள் பார்த்தாலோ அல்லது உங்களுக்குச் சந்தேகம் எழுந்தாலோ, தயவுசெய்து Exyte Compliance Team-ஐத் தொடர்புகொள்ளவும்.



டாக்டர். உல்ஃப்கேங் புச்செல்
நிர்வாக சபைத் தலைவர்

# 01 | எங்களின் COMPLIANCE கலாச்சாரம்

நமது நோக்கம் பொறியியலுக்கு அப்பாற்பட்டது. அதிநவீன வசதிகள் மூலம், நாம் மின்னிலக்க புதுமையாக்கத்தில் மற்றும் மேலும் உயிர் காக்கும் மருந்துகளின் உற்பத்தியில் மாற்றங்களை இயலச் செய்கிறோம். நேர்மையாகவும் சட்டத்திற்கு Compliance உடனும் செயல்படுகின்ற அதே நேரத்தில், உயர்தர திட்டப்பணிகள் மற்றும் தயாரிப்புப் பொருள்களை வழங்குவதில் நூறு ஆண்டுகளுக்கும் மேலாக நிபுணத்துவம் கொண்ட ஒரு நம்பகமான கூட்டாளராக இருப்பதில் நாங்கள் பெருமிதம் கொள்கிறோம்.

Exyte-இல், நேர்மை என்பது யாரும் கவனிக்காவிட்டாலும் கூட சரியான விஷயத்தைச் செய்வதைக் குறிக்கின்றது. நமது Code of Conduct அனைத்து Exyte துணை நிறுவனங்களுக்கும் பொருந்தும் மேலும் இது பணிபுரியும் நமது மக்களையும் நமது நிறுவனங்களையும் பாதுகாக்க ஒரு கட்டமைப்பை வழங்குகிறது. கட்டுப்பாடுகள் மற்றும் செயல்முறைகள், தகவல்தொடர்பு மற்றும் பயிற்சி, மீளாய்வு மற்றும் கண்காணித்தல் ஆகியவை நமது Compliance Management System-இன் முக்கியத் தூண்களாக விளங்குகின்றன, இவை இந்தக் கருத்துகளை நமது வணிகத்தில் ஆழ்ந்து செயல்படுத்த உதவுகின்றன.

நீங்கள் தவறான நடத்தையைப் பார்த்தாலோ அல்லது ஏதாவது பொருத்தமற்றதாக இருப்பதாகக் கருதினாலோ அதைப் பற்றித் தகவல் அளிப்பதன் மூலம் நீங்கள் இந்தக் கலாச்சாரத்தை வளர்க்க முடியும். உங்கள் இணக்க அணியை நேரடியாகத் தொடர்பு கொள்ளவும் அல்லது Corporate Compliance Team-ஐ ethics@exyte.net வழியாகத் தொடர்பு கொள்ளவும் நாங்கள் உங்களை ஊக்குவிக்கிறோம். நன்னம்பிக்கையின் அடிப்படையில் அளிக்கப்படும் அனைத்துப் புகார்களும் தீவிரமாக எடுத்துக்கொள்ளப்படும் என்றும், கண்டிப்பான மறைவடக்கத்துடன் கையாளப்படும் என்றும், எதிர்த்தாக்குதல் அபாயம் எதையும் கொண்டிருக்காது என்றும் உங்களுக்கு உறுதியளிக்கிறோம். அதோடு, ஒரு மூன்றாம் தரப்பால் சுயாதீனமாகச் செயல்படுத்தப்படும் நமது மின்னிலக்கத் தகவல் அளிக்கும் தளமாகிய (www.speak-up.exyte.net), அநாமதேயமாகத் தகவல் அளிப்பதற்கான விருப்புரிமையை வழங்குகின்றது.

Speak Up!
It's the right way

நமக்காக நாம் நிர்ணயித்துள்ள அதே உயர்வான தரநிலைகளை நமது வணிகக் கூட்டாளர்களும் கடைப்பிடிக்க வேண்டும் என நாங்கள் எதிர்பார்க்கிறோம். நமது திட்டப்பணிகளை நிறைவேற்ற நமது விநியோகத் தொடர் அவசியமானது என்பதால், நமது கொள்கைகளைப் புரிந்துகொண்டு பகிர்கின்ற கூட்டாளர்களையே நாங்கள் தேர்ந்தெடுக்கின்றோம். Exyte Supply Chain Code of Conduct இந்த ஆவணத்தை முழுமையாக்குவதாக உள்ளது மற்றும் நம்முடன் கூட்டுச் சேர்ந்துள்ளவர்களுக்கு நன்னெறி சார்ந்த வணிக நடத்தைக்கான நமது எதிர்பார்ப்புகளைச் சுருக்கமாகக் குறிப்பிடுகின்றது. அவர்களுடைய non-compliance குறித்தும் நமது தகவல் தெரிவித்தல் அமைப்பு மூலமாகத் தகவல் அளிக்கலாம். அத்தகைய தகவல்கள் தெரிவித்தல் வலுவாக ஊக்குவிக்கப்படுகிறது மற்றும் பெரிதும் பாராட்டப்படுகிறது.

## EXYTE CODE OF CONDUCT உடன் இணங்கிச் செல்வதே சரியான வழியாகும்.

**அனைவருக்கும்**
Exyte-இன் பணியாளர்களுக்காக.
நமது வணிகக் கூட்டாளிகளுக்காக.
நமது அனைத்துப் பங்குதாரர்களுக்காக.

**எல்லா இடங்களிலும்**
நமது அலுவலகங்களில்.
நமது கட்டுமானத் தளங்களில்.
நமது உற்பத்தித் தொழிற்சாலைகளில்.

**ஒவ்வொரு முறையும்**
Compliance என்பது ஒரு மனப்பான்மை.

# 02 | COMPLIANCE-க்கான பொறுப்பேற்றல்

Exyte Code of Conduct Exyte-இல் உள்ள அனைவரின் நடத்தைத் தரத்தையும் வரையறுக்கின்றது. இது உட்புற வேலையில் நாம் எவ்வாறு இருவழிக் கருத்துப் பரிமாற்றத்தில் ஈடுபடுகிறோம் மற்றும் பணியாற்றுகிறோம், மேலும், வாடிக்கையாளர்கள், வணிகக் கூட்டாளர்கள் மற்றும் பிற பங்குதாரர்கள் போன்ற மூன்றாம் தரப்பினருடன் உறவுகளுக்கான அடித்தளத்தை அமைக்கின்றது என்பதைத் தீர்மானிக்கின்றது.

Exyte-இல் அல்லது அதன் சார்பாகப் பணிபுரிகின்ற அனைவரும் Exyte Code of Conduct-ஐப் புரிந்துகொண்டு இணங்கி நடக்க வேண்டும் என்றும், அவற்றைத் தங்கள் அன்றாடப் பணியில் பயன்படுத்த வேண்டும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. குறிப்பாக மேலாளர்கள், நமது நிறுவனக் கொள்கைகளைக் கடைபிடிப்பதன் மூலமும், உயர்மட்டத்திலிருந்து தரநிலையை நிர்ணயிப்பதன் மூலமும், முன்னுதாரணமாக விளங்குவதன் மூலமும், தங்கள் அணிகள் நமது Compliance கலாச்சாரத்தைப் புரிந்துகொள்வதையும், கடைபிடிப்பதையும், ஊக்குவிப்பதையும் உறுதிசெய்வதன் மூலமும் Compliance கலாச்சாரத்தை உருவாக்குவதில் முக்கியப் பங்காற்றுகின்றனர்.

Compliance-க்கான பொறுப்பேற்றல் என்பது இணக்க விதிகளைக் கடைப்பிடிப்பதற்கும் அப்பாற்பட்டதாகும்: எல்லாவற்றிற்கும் மேலாக, அது ஒரு மனப்பான்மை ஆகும். Exyte-இல் அல்லது அதன் சார்பாகப் பணிபுரிகின்ற அனைவரும் வணிகம் செய்வதற்கான சரியான வழிமுறையாக நமது Compliance விதிகளை வழிகாட்டுதலாகக் கொள்ள வேண்டும் என நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

சட்டங்களுக்கு அல்லது Exyte Code of Conduct-களுக்கு non-compliance ஆக இருப்பதை Exyte பொறுத்துக்கொள்ளாது மற்றும் ஒழுங்கு நடவடிக்கைகள் அல்லது சட்ட நடவடிக்கைகள் போன்றவற்றின் மூலம் இந்த நிலைப்பாட்டை அது கடுமையாக அமல்படுத்தும்.

Compliance-ஐ ஒரு மனப்பான்மையாக
**›› நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம்.**



**உதாரணம்**

ஒரு புதிய திட்டப்பணியின் மேலாளராக, Compliance மற்றும் நேர்மை குறித்த உங்கள் நிலைப்பாட்டைத் தெளிவாகத் தெரிவிப்பது முக்கியமானது என நீங்கள் கருதுகிறீர்கள். எனவே, உங்கள் திட்டக் குழுவிற்கான மிக முக்கியமான செய்ய வேண்டியவை மற்றும் செய்யக் கூடாதவை பற்றி தளத்தில் நேரடி பயிற்சிப் பயிலரங்கில் சுட்டிக்காட்டுமாறு உங்கள் Compliance Officer-யிடம் கேட்க நீங்கள் முடிவு செய்கிறீர்கள். இது இணக்கத்திற்கான பொறுப்பேற்பதற்கும், Exyte-இல் Compliance-இன் முக்கியத்துவத்தை மீண்டும் உறுதிப்படுத்துவதற்கும் சிறந்த வழி ஆகும்.

# 03 | பணி புரியும் மக்கள் மீது அக்கறை

Exyte ஆனது பணி புரியும் மக்கள் வணிகம் ஆகும். மனித வளங்கள் நமது மிக முக்கியமான சொத்து, இதை வளர்க்கவும் பாதுகாக்கவும் நாம் கடமைப்பட்டுள்ளோம்.

பணி புரியும் மக்கள் மீது அக்கறை காட்டுதல் என்பது நமது நீடித்த நிலைத்தன்மைக்கான உத்தியின் தூண்களில் ஒன்றாகும், மேலும் இது நமது அன்றாட நடத்தையில் ஒரு வழிகாட்டும் கொள்கையாகவும் விளங்குகிறது. Exyte ஒரு பணியமர்த்துநராக, சமூகப் பொறுப்பின் மீது செலுத்தும் இந்தக் கவனம் ஒளிவுமறைவற்ற வேலை நிலைமைகளைக் கொண்ட பாதுகாப்பான மற்றும் ஆரோக்கியமான வேலைச் சூழ்நிலையை உறுதி செய்வதில் இருந்து ஒவ்வொரு பணியாளரின் தனிப்பட்ட வளர்ச்சியை ஊக்குவிப்பது வரை பல்வேறு வகையான முயற்சிகளை உள்ளடக்கியதாகும். இந்த முயற்சிகள் Exyte-இல் அல்லது அதன் சார்பாகப் பணிபுரிகின்ற அனைவரின் அடிப்படை உரிமைக்கு ஆதரவளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது: அது சமமாகவும் மரியாதையுடனும் நடத்தப்படுவதற்கான உரிமை.

தனிநபர்களாக நமது பணியாளர்களுக்கு நாங்கள் மதிப்பளிக்கிறோம் மற்றும் அவர்களின் கருத்தின் மீது அக்கறை காட்டுகிறோம். இருப்பினும், மற்றவர்களின் உரிமைகள் பாதிக்கப்படும் போது பேச்சு சுதந்திரம் தடைப்படுகிறது. Exyte அரசியல் மற்றும் சமயம் சார்பான விஷயங்களில் நடுநிலையான நிலைப்பாட்டைப் பராமரிக்க முயற்சிக்கிறது மற்றும் வேலை தொடர்பான சமூக ஊடக தளங்களில் ஊழியர்களும் இதையே கடைப்பிடிக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அனைத்துப் பொருந்தக்கூடிய சட்டங்களுக்கும், சர்வதேசத் தொழிலாளர் அமைப்பின் (ILO) வேலையில் அடிப்படைக் கோட்பாடுகள் மற்றும் உரிமைகள் பற்றிய பிரகடனத்தில் உள்ள முக்கிய தொழிலாளர் தரநிலைகளுக்கும் Compliance ஆன ஒரு வேலையிடத்தை வழங்க Exyte உறுதியேற்றுள்ளது. மேலும், நமது வணிகக் கூட்டாளர்கள் தங்கள் பங்கிற்கு இணக்கத்தை உறுதி செய்ய வேண்டும் என எதிர்பார்க்கிறோம்.

Exyte நிறுவனத்திற்குள்ளும், வணிகக் கூட்டாளர்கள் அல்லது பிற பங்குதாரர்களுடனும் மரியாதைக்குரிய நடத்தையை அனைத்து உறவுகளின் அடித்தளமாக **» நாங்கள் எடுத்துக்கொள்கிறோம்.**



## 3.1 மனித உரிமைகள்

Exyte-இல் அல்லது அதன் சார்பாகப் பணிபுரியும் அனைவரின் மிக அடிப்படையான உரிமைகளாக நாங்கள் பாதுகாத்துக் காப்பாற்றுகிறோம்: அவர்களுடைய மனித உரிமைககளை.

சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மனித உரிமைகள் கொள்கைகளுக்கு, குறிப்பாக மனித உரிமைகளுக்கான சர்வதேச மசோதா மற்றும் வணிகம் மற்றும் மனித உரிமைகளுக்கான ஐ.நா வழிகாட்டும் கோட்பாடுகள் (ஐ.நா. உலகளாவிய ஒப்பந்தம்) போன்றவற்றிற்கான எங்கள் அர்ப்பணிப்பை நாங்கள் உறுதிப்படுத்துகிறோம், அவை எங்கள் Human Rights Policy மற்றும் திட்டத்தின் கட்டமைப்பிற்குள் எங்கள் வணிக செயல்முறைகளுடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.

அனைத்து வகையான கட்டாய மற்றும் குழந்தைத் தொழிலாளர்களை அமர்த்தும் முறைகளையும் நாங்கள் கடுமையாக எதிர்க்கிறோம், மேலும் தானாக முன்வந்து வேலை செய்வதை தேர்ந்தெடுத்துள்ள பணியாளர்களை மட்டுமே பிரத்யேகமாக நமது சமூகத்தில் ஒரு அங்கமாக நம்பியுள்ளோம். அந்தக் காரணத்திற்காக, அனைத்துப் பொருந்தக்கூடிய சட்டங்கள் மற்றும் தொழில் தரநிலைகளுக்கு Compliance ஆன நமது வேலை நிலைமைகள் பற்றிய வெளிப்படைத்தன்மையை வழங்குகின்ற நியாயமான ஆளெடுத்தல் நடைமுறைகளுக்கு நாங்கள் உறுதியேற்றுள்ளோம்.

### குழந்தைத் தொழிலாளர் மற்றும் கட்டாயத் தொழிலாளர் முறைக்கு எதிராக

**›› நாங்கள் உறுதியான நிலைப்பாட்டை எடுக்கிறோம்.**

## 3.2 DIVERSITY

கலாச்சார diversity என்பது நமது நிறுவனத்தில் செழுமையை உருவாக்கும் ஒரு பலம் ஆகும் மற்றும் அது நமது வெற்றியின் ஒரு முக்கியக் காரணியாகவும் விளங்குகிறது. நாங்கள் பாகுபாடு காட்டுவதில்லை மற்றும் பாகுபாடு காட்டப்படுவதை நாங்கள் பொறுத்துக்கொள்ளவும்மாட்டோம்.பணியாளர்கள் ஒவ்வொருவரும் பரஸ்பரம் மற்றவரை மரியாதையுடனும் நியாயமாகவும் நடத்த வேண்டும் எனக் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். உதாரணமாக, ஆளெடுத்தல் அல்லது பலன்கள் தொடர்பான முடிவுகள் உட்பட அனைத்து வேலைவாய்ப்பு முடிவுகளும் இனம், இனப் பூர்வீகம், தேசியம், பால், பாலினம், பாலியல் நோக்குநிலை, நிறம், சமயம் அல்லது நம்பிக்கை, உடற்குறை, வயது அல்லது சட்டத்தால் பாதுகாக்கப்பட்ட வேறொரு நிலை தொடர்புடையதாக அல்லாமல் முற்றிலும் திறன்கள், தகுதி மற்றும் அனுபவம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டவை. நாங்கள் நமது பணியாளர்களைப் பற்றிப் பெருமிதம் கொள்கிறோம், அவர்களுடைய வேறுபாடுகளில் இருந்து பலனடைகிறோம் மற்றும் தனிப்பட்ட முறையில் அவர்களை ஊக்குவிக்கிறோம்.

அனைத்து மேலாளர்களும் முன்னுதாரணமாக விளங்க வேண்டும் எனவும், தங்கள் பொறுப்பிற்குரிய பகுதியில் பாகுபாடு மற்றும் துன்புறுத்தல் எதுவும் இல்லாமல் இருப்பதை அவர்கள் உறுதிசெய்ய வேண்டும் எனவும் நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

›› மேலும் படிக்கவும்: மனித உரிமைகள் கொள்கை

### நாங்கள் அனைவரையும்

**›› சமமாகவும் மரியாதையாகவும் நடத்துகிறோம்.**



**உதாரணம்**

பணிபுரியும் மக்களைப் பற்றி, அவர்களின் தேசியம், பாலினம், பாலியல் நோக்குநிலை அல்லது சருமத்தின் நிறம் ஆகியவற்றின் காரணமாக ஒரு சக பணியாளர் மரியாதைக் குறைவான கருத்துகளைத் தெரிவிப்பதை நீங்கள் கேட்கிறீர்கள். நீங்கள் துணிவு கொண்டவராக இருந்தால் உடனடியாக இந்தப் பாகுபாட்டிற்கு எதிராகத் தலையிடவும் அல்லது உடனடியாக உங்கள் மேலாளரிடம் தகவல் அளிக்கவும் அல்லது நமது Speak Up அமைப்பைப் பயன்படுத்தவும்.

# 04 | தனிப்பட்ட தரவு

Exyte இல், பிறவற்றுக்கு இடையே, எங்கள் வெற்றிக்கு காரணம், எங்கள் பணியாளர்கள், வாடிக்கையாளர்கள், துணை ஒப்பந்ததாரர்கள் மற்றும் பிற வணிகக் கூட்டாளர்கள் தங்கள் தனிப்பட்ட தரவைச் செயலாக்குவதில் வைத்திருக்கும் நம்பிக்கையைப் பொறுத்தது என்பதை நாங்கள் உறுதியாக நம்புகிறோம். எனவே, Exyte ஆனது தனிப்பட்ட தரவைப் பாதுகாப்பதை மிகத் தீவிரமாக எடுத்துக்கொள்கிறது. தனிப்பட்ட தரவை நாங்கள் எவ்வாறு சேகரிக்கிறோம் மற்றும் பயன்படுத்துகிறோம் என்பதில் வெளிப்படைத்தன்மையுடன் இருக்க நாங்கள் உறுதிபூண்டுள்ளோம். மேலும், நாங்கள் அவற்றை பொருந்தக்கூடிய சட்டங்களுக்கு, குறிப்பாக ஐரோப்பிய ஒன்றிய பொதுத் தரவுப் பாதுகாப்பு ஒழுங்குவிதிகளுக்கு இணங்க மட்டுமே செயல்முறைப்படுத்துகிறோம்.

தனிப்பட்ட தகவல்களின் தகுந்த பாதுகாப்பை உறுதிசெய்ய Exyte ஆனது தொழில்நுட்ப மற்றும் நிறுவனம் சார்ந்த நடைமுறைகளை அமல்படுத்தியுள்ளது. பணியாளர்கள், வாடிக்கையாளர்கள், சப்ளையர்கள் மற்றும் பிற வணிகக் கூட்டாளர்களின் தனிப்பட்ட தரவை எதன் அடிப்படையில் Exyte சேகரிக்கலாம், பயன்படுத்தலாம், வெளிப்படுத்தலாம் அல்லது செயல்முறைப்படுத்தலாம் என்பதை நமது Data Protection Policy விளக்கிக் கூறுகின்றது. Exyte-இன் அனைத்து உறுப்பினர்களும் இந்த நடைமுறைகளை அமல்படுத்த வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றனர்.

»» மேலும் படிக்கவும்: தரவுப் பாதுகாப்புக் கொள்கை

## நாங்கள் உங்கள் » **தனிப்பட்ட தரவைப் பாதுகாக்கிறோம்.**



### உதாரணம்

Exyte-இல் திட்டப்பணி மேலாளர் என்ற முறையில் தளத்தில் பணிபுரியும் துணை ஒப்பந்தப் பணியாளர்களின் மின்னஞ்சலை உள்ளடக்கிய ஒரு பட்டியலை நீங்கள் பெறுகிறீர்கள். இது தனிப்பட்ட தரவு என்பதை நீங்கள் அறிந்துகொள்கிறீர்கள். அதை உள்செயல்பாடுகளுக்குப் பகிர்ந்துகொள்ள வேண்டுமா, எப்படி பகிர்வது என்பதைத் தீர்மானிக்க ஒரு நிமிடம் எடுத்துக்கொள்கிறீர்கள். அங்கீகரிக்கப்பட்ட பணியாளருக்கு அதை அனுப்புவதற்கு முன், அதை மிகவும் பாதுகாப்பாக அனுப்பும் வழி குறித்தும், அதைச் செயல்முறைப்படுத்துவதற்கான மற்றும் சேமிப்பதற்கான சட்ட நிபந்தனைகள் குறித்தும் Data Protection Officer-யிடம் இருந்து ஆலோசனை கோருகிறீர்கள்.

# 05 | நலன்களின் முரண்பாடுகள்

நமது வணிக முடிவுகள் பிரத்தியேகமாக புறவயத் தகுதி விதிகளின் அடிப்படையில் அமைந்தவை ஆகும். அவை தனிப்பட்ட நலன்களால் பாதிக்கப்படாது. உங்கள் தனிப்பட்ட வாழ்க்கையை நாங்கள் மதிக்கும் அதே வேளையில், உங்கள் பணியிடத்திலிருந்து அதைப் தனிமைப் படுத்த வேண்டும் என நாங்கள் எதிர்பார்க்கிறோம். உங்கள் தொழில் நடத்தையில், நீங்கள் நேர்மையாக நடந்துகொள்ள வேண்டும் என்றும், Exyte நலன்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்ற முடிவுகள் எடுக்க வேண்டும் என்றும் நாங்கள் எதிர்பார்க்கிறோம். உங்கள் தனிப்பட்ட நலன்கள் Exyte-இன் நலன்களுடன் குறுக்கிடும்போது நலன்களின் முரண்பாடுகள் எழுகின்றது. உண்மையான அல்லது எழுவதற்குச் சாத்தியமுள்ள ஏதேனும் நலன்களின் முரண்பாடு பற்றித் தகவல் அளிக்க வேண்டியது உங்களுடைய பொறுப்பாகும்.

Exyte-இன் Conflicts of Interest Policy வேலையில் தனிப்பட்ட உறவுகள் மற்றும் வணிகக் கூட்டாளர்களுடனான உறவுகள் அல்லது போட்டியாளர் அல்லது சப்ளையரிடம் இரண்டாம் நிலை வேலைவாய்ப்பு போன்ற நலன்களின் முரண்பாடுகளை ஏற்படுத்துகின்ற காட்சிகளைச் சுட்டிக்காட்டுகின்றது (பிற இரண்டாம் நிலை வேலைவாய்ப்புகள் அனைத்தும் பொருந்தக்கூடிய HR நடைமுறைகளால் கட்டுப்படுத்தப்படுகின்றன). சூழ்நிலையும் தொடர்புடைய அபாயமும் அடையாளம் கண்டறியப்பட்டு, உரிய முறையில் தகவல் அளிக்கப்பட்டு, திறமையாக நிர்வகிக்கப்படும் வரை நலன்களின் முரண்பாடுகள் தவறானவையாக அல்லது விதிமுறையற்றவையாக இருப்பதில்லை.

நமது Conflicts of Interest Policy-ஐ அறிந்து கொள்ளுங்கள் மேலும் ஏதேனும் சந்தேகம் இருந்தால் Compliance அணியிடம் ஆலோசனை கோருங்கள். நலன்களின் முரண்பாடுகள் ஏற்படக்கூடிய அல்லது நலன்களின் முரண்பாடாகக் கருதப்படக்கூடிய ஒரு சூழ்நிலையில் நீங்கள் சிக்கிக்கொண்டதாக அறிந்தால், வெளிப்படைத்தன்மையை உறுதி செய்யுங்கள், நேர்மையைக் கடைபிடியுங்கள், தாமதமின்றி Compliance அணியிடம் அல்லது உங்கள் நேரடி மேலாளரிடம் தகவல் அளியுங்கள். நலன்களின் முரண்பாடுகளை முன்னெச்சரிக்கையாக நிர்வகிப்பதன் மூலம், நமது சகப் பணியாளர்கள் மற்றும் வணிகக் கூட்டாளர்களின் நம்பிக்கையை நாம் காப்பாற்ற முடியும்.

»» மேலும் படிக்கவும்: Conflicts of Interest Policy

## நாங்கள்
## »நலன்களின் முரண்பாடுகளை வெளிப்படுத்துகிறோம்.



**உதாரணம்**

நீங்கள் கொள்முதல் பிரிவில் பணிபுரிகிறீர்கள். உங்கள் மனைவிக்கு நமது சப்ளையர்களில் ஒருவரிடம் விற்பனை மேலாளராக வேலை கிடைக்கின்றது. தனிப்பட்ட பட்சபாதம் இருப்பதாக எண்ணம் ஏற்படலாம் என்பதால் இந்தத் தனிப்பட்ட தொடர்பு பற்றி உங்கள் மேலாளரிடமும் Compliance அணியிடமும் தெரிவிக்கவும். ஏதேனும் நலன்களின் முரண்பாடு ஏற்படுவதைத் தவிர்க்க சப்ளையர் தொடர்பான முடிவெடுத்தல் செயல்முறையில் இருந்து விலகியிருக்கவும்.

# 06 | நிறுவன வளங்கள்

## 6.1 சொத்துகள்

உங்கள் வேலையை மேற்கொள்ளத் தேவையான அனைத்துக் கருவிகளையும் உபகரணங்களையும் Exyte உங்களுக்கு வழங்கும். Exyte-இன் புலப்படும் சொத்துகள், அறிவுசார் சொத்துகள் மற்றும் தரவு ஆகியவை சேதம், இழப்பு, பாதிக்கப்படும் நிலை மற்றும் தவறான பயன்பாடு ஆகியவற்றிற்கு உட்படாமல் பாதுகாக்க வேண்டியது உங்கள் பொறுப்பாகும். நமது உள் விதிகளில் வெளிப்படையாக அனுமதிக்கப்பட்டால் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பணியாளர் என்றால் மட்டுமே நீங்கள் நிறுவனத்தின் சொத்துகளை தனிப்பட்ட நோக்கங்களுக்காக பயன்படுத்த முடியும்.

நிறுவனத்தின் சொத்துகளைப் பயன்படுத்தும்போது பணியாளர்கள் விழிப்புடனும் பொறுப்புணர்வுடனும் இருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றனர். உதாரணமாக, உபகரணத்தை அறிவுறுத்தப்பட்டவாறு பயன்படுத்துதல் அல்லது தேவையில்லாத பயணம் மற்றும் விலையுயர்ந்த தங்குமிடம் போன்றவற்றைத் தவிர்த்தல் போன்றவை இதில் அடங்கும். இவ்வாறு செய்வதன் மூலம், நீங்கள் Exyte-இன் ஒட்டுமொத்தச் செயல்திறனுக்கு நேரடியாகப் பங்களிக்கிறீர்கள்.

**நாங்கள் நிறுவன வளங்களை**
**›› விழிப்புடன் பயன்படுத்துகிறோம்.**

## 6.2 தரவு

அறிவும் வழிவகையறிவும் Exyte-இன் வெற்றிக்கு முக்கியமாகும். Exyte-இன் வர்த்தக இரகசியங்களும் பிற மறைவடக்கமான தகவல்களையும் பாதுகாப்பது நிறுவனத்தின் எதிர்காலத்திற்கு மிக முக்கியமானது என்பது சொல்லாமலே தெரியக்கூடியது. ஒரு திட்டப்பணியின்போதோ அல்லது ஒரு திட்டப்பணியை வழங்குவதற்கு முன்னதாகவோ நமக்குக் கிடைக்கப்பெற்ற நமது வணிகக் கூட்டாளரின் தரவு தொடர்பாகவும் இதே அக்கறையும் கவனமும் செலுத்தப்பட வேண்டும். அனைத்து இரகசியத் தகவல்களும், அவை Exyte அல்லது நமது வணிகக் கூட்டாளர்கள் என யாருடையதாக இருந்தாலும், பொறுப்புணர்வுடன் கையாளப்பட வேண்டும். இரகசியத் தகவலை அடையாளக் குறியிடவும், அதைப் பாதுகாப்பாகச் சேமிக்கவும். அதைத் தெரிந்துகொள்ள வேண்டிய தேவையுள்ள அங்கீகரிக்கப்பட்ட நபர்களுக்கு மட்டுமே அதற்கான அணுகலை வழங்கவும். நீங்கள் பணிபுரியும் காலத்தில் உங்களால் பெறப்பட்ட இரகசியத் தகவல்களை நீங்கள் வேலையில் இருக்கும்போதோ அல்லது வேலையிலிருந்து நின்ற பின்னரோ ஒருபோதும் வெளிப்படுத்தக் கூடாது.




### உதாரணம்

நீங்கள் Exyte திட்டப்பணியில் ஒரு பொறியாளராக வேலைசெய்கிறீர்கள்.வேறொருநிறுவனத்தில்வேலை செய்கின்ற ஒரு நண்பருடன் உரையாடும்போது நமது திட்டப்பணிகளில் ஒன்றைப் பற்றிய விவரங்களை அறிந்துகொள்வதில் அவர் ஆர்வம் காட்டுகிறார். திட்டப்பணி விவரங்கள் மறைவடக்கமானவை என்பதை அவருக்கு நினைவுபடுத்திய நீங்கள், திட்டவட்டமான விவரங்கள் எதையும் தெரிவிக்க கனிவுடன் மறுத்துவிடுகிறீர்கள்.

# 07 | லஞ்சம் மற்றும் ஊழல்

## 7.1 நமது பொதுவான நிலைப்பாடு

Exyte ஊழல் மற்றும் இலஞ்சத்திற்கு எதிராக உறுதியான நிலைப்பாட்டை எடுக்கின்றது, நமது வணிகக் கூட்டாளர்களிடம் இருந்தும் நாங்கள் இதையே எதிர்பார்க்கிறோம். நாங்கள் லஞ்சம் – யாருக்கும் கொடுப்பதில்லை – எங்கும் கொடுப்பதில்லை.

பொதுவான வணிகம் அல்லது சமூக நடைமுறைகள் என்ற போர்வையின் கீழ் லஞ்சம் பல வடிவங்களைக் கொண்டிருக்கலாம். Exyte-இல், நமது சேவைகள் மற்றும் தயாரிப்புப் பொருள்களின் உன்னதநிலையின் மூலமே நமது வாடிக்கையாளர்கள் மற்றும் பிற வணிகக் கூட்டாளர்களின் கவனத்தை நாம் ஈர்த்திருக்கிறோமே தவிர, தவறான முறையில் செல்வாக்குச் செலுத்துவதால் அல்ல என்பதில் நாங்கள் பெருமிதம் கொள்கிறோம். Exyte பணியாளர்களும் Exyte-இன் சார்பாகச் செயல்படுகின்ற எவரும், முடிவெடுத்தல் செயல்முறையில் அல்லது ஒரு நடவடிக்கையில் தவறான முறையில் செல்வாக்குச் செலுத்துவதற்காக, மதிப்புள்ள எதையும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தருவதாக கூறவோ, உறுதியளிக்கவோ அல்லது கொடுக்கவோ, கோரவோ, வேண்டவோ அல்லது ஏற்கவோ கூடாது. உங்களுக்கு ஏதேனும் சந்தேகம் இருந்தால், நீங்கள் Exyte Compliance Team-ஐக் கலந்தாலோசிக்க வேண்டும்.

நாங்கள் லஞ்சம்
**›› யாருக்கும் கொடுப்பதில்லை – எங்கும் கொடுப்பதில்லை.**

ஒரு கூட்டத்திற்குப் பிறகு மரியாதை நிமித்தமாக சிறு பரிசுகள் வழங்குதல் அல்லது ஒரு வணிக விருந்துக்கு அழைப்பு விடுத்தல் ஆகியவை பல பிராந்தியங்களில் பொதுவான வணிக நடைமுறையாக உள்ளன. இருந்தாலும், அத்தகைய நட்பு முறையிலான நடத்தைகள் கூட ஒரு வணிகக் கூட்டாளர் மீது தவறான முறையில் செல்வாக்குச் செலுத்துவதற்கான முயற்சிகள் எனத் தவறாகப் புரிந்துகொள்ளப்படலாம். நமது நேர்மை தொடர்பான ஒருசார்பு எண்ணம் அல்லது பிரச்சனைகள் ஏற்படுவதைத் தடுக்கவும், பணியாளர்களையும் நிறுவனத்தையும் பாதுகாக்கவும் Exyte-இன் Anti-Bribery and Corruption Policy அத்தகைய சூழ்நிலைகளைக் கையாளுவதற்கான விதிகளை வகுத்துள்ளது.

உங்கள் வணிகக் கூட்டாளர் இன்னும் கூட கடுமையான விதிகளையும் கட்டுப்பாடுகளையும் வைத்திருக்கலாம் என்பதைக் கவனத்தில் கொள்ளவும். எனவே, மதிப்புள்ள எதையும் வழங்குவதற்கு முன் நீங்கள் எப்பொழுதும் அவர்களுடைய Code of Conduct-ஐப் பார்க்க வேண்டும்.



## நமது வணிகக் கூட்டாளர்களை செயல்பாட்டில் உன்னதம் மற்றும் நேர்மையின் மூலம் மட்டுமே மனநிறைவு கொள்ளச் செய்கிறோம், பரிசுகள் அல்லது அழைப்புகள் மூலம் அல்ல

**CEO டாக்டர். டபிள்யூ. பூச்செல் (Dr. W. Büchele)**

## 7.3 பொது அதிகாரத்தில் இருப்பவர்கள்

ஒரு விதியாக, நாங்கள் பொதுவாக பரிசுகள் மற்றும் அழைப்புகளுக்குத் தடை விதித்துள்ளோம். விதிவிலக்கான நிகழ்வுகளில், நாங்கள் எதையாவது அளிப்பதற்கு அல்லது ஏற்பதற்குத் தீர்மானித்தால், அது நியாயமான மதிப்புடையதாகவும் குறிப்பிட்ட சூழ்நிலைக்குப் பொருத்தமானதாகவும் இருக்க வேண்டும். இந்தப் பொது விதி Exyte-இன் Anti-Bribery and Corruption Policy-இல் விளக்கிக் கூறப்பட்டுள்ளது. அதில் பரிசுகளுக்கான உச்ச வரம்பு வரையறுக்கப்பட்டுள்ளது மற்றும் அது அழைப்புகள் குறித்த திட்டவட்டமான அணுகுமுறையை வழங்குகிறது.

எந்த வழியிலும் பெறுபவரின் மீது தவறான செல்வாக்குச் செலுத்துவதாகக் கருதப்படவில்லை எனில், மரியாதை நிமித்தமாக உச்ச வரம்புக்குக் குறைவான பரிசுகளைக் கொடுக்கவோ அல்லது பெறவோ செய்யலாம்.

இதற்கு வேறுபாடாக, வணிக விருந்துகள் அல்லது நிகழ்ச்சிகளுக்கான அழைப்புகளை வழங்குவதற்கு அல்லது ஏற்பதற்கு Exyte எந்த உச்ச வரம்பையும் வரையறுக்கவில்லை. வணிக விருந்துகளுக்கான அழைப்புகள் நியாயமான மதிப்புடையதாகவும் சம்பந்தப்பட்ட சூழ்நிலைக்குப் பொருத்தமானதாகவும் இருந்தால் அவற்றை வழங்கவோ அல்லது ஏற்கவோ செய்யலாம் என்றாலும், Anti-Bribery and Corruption Policy-ன்படி நிகழ்ச்சிகளுக்கான அழைப்புகளுக்கு நமது Compliance அணியின் முன் அனுமதி பெறப்பட வேண்டும்.

பொது அதிகாரத்தில் இருப்பவர்களுடன் தொடர்பு கொள்ளும்போது ஊழல் எதிர்ப்புச் சட்டங்களை மீறக்கூடிய அபாயம் கணிசமான அளவு அதிகமாக உள்ளது. இந்தக் காரணத்திற்காக, பொது அதிகாரத்தில் இருப்பவர்களுக்கு எதையும் கொடுப்பதோ அல்லது அளிப்பதோ கண்டிப்பாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

பல நாடுகளில் அரசுப் பணியாளர்கள் மட்டுமே பொது அதிகாரத்தில் இருப்பவர்கள்பொது அதிகாரிகளாகக் கருதப்படுவதில்லை என்பதையும், அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களின், பொதுச் செயல்பாட்டில் ஈடுபட்டுள்ள தனியார் நிறுவனங்களின் நிர்வாகிகள் (உ.ம். எரிசக்தி சப்ளையர்) அல்லது பொது சர்வதேச நிறுவனங்களின் அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் ஆகியோரும் பொது அதிகாரத்தில் இருப்பவர்களாகக் கருதப்படுகின்றனர் என்பதையும் கவனத்தில் கொள்ளவும். பொது அதிகாரத்தில் இருக்கக்கூடிய ஒரு நபருக்கு எதையாவது கொடுப்பதற்குப் பரிசீலிப்பதற்கு முன் நீங்கள் எப்பொழுதும் Compliance அணியைக் கலந்தாலோசிக்க வேண்டும்.

»» மலேும் படிக்கவும்: இலஞ்ச எதிர்ப்பு மற்றும் ஊழல் எதிர்ப்புக் கொள்கை



## அழைப்புகளுக்கான உதாரணங்கள்

ஒரு துணை ஒப்பந்ததாரரின் நிர்வாக இயக்குநர் பல ஆண்டுகளாக நிறுவனங்களுக்கு இடையே நிலவும் வலுவான வணிக உறவைக் கொண்டாடுவதற்காக விலையுயர்ந்த உணவகத்திற்கு உங்களை அழைக்கிறார். டெண்டரில் அவரது நிறுவனம் ஒரு விலைக்குறிப்பைச் சமர்ப்பித்துள்ளது என்பதால், அது நமது முடிவெடுத்தல் செயல்முறையின் மீது தவறான செல்வாக்குச் செலுத்துவதற்கான நோக்கமாக இருக்கலாம் அல்லது அவ்வாறான நோக்கம் கொண்டதாகக் கருதப்படலாம் என்பதால் நீங்கள் அந்த அழைப்பை ஏற்க வேண்டாம் எனத் தீர்மானிக்கிறீர்கள். உங்களால் உறுதியான முடிவு எடுக்க முடியவில்லை என்றால் எப்பொழுதும் Compliance அணியிடம் ஆலோசனை பெறவும்.

## 7.4 முகவர்கள் மற்றும் ஆலோசகர்களை ஈடுபடுத்துதல்

வணிகத்தைப் பெற அல்லது புதிய சந்தைகளுக்குள் நுழைய இடைத்தரகர்களைப் பயன்படுத்துவது குறிப்பாக துஷ்பிரயோகத்திற்கான பாதிப்பைக் கொண்டிருப்பதாக நிரூபிக்கப்பட்டுள்ளது. அத்தகைய ஆலோசனைச் சேவைகளின் விளைபயனை மதிப்பிடுவது வழக்கமாக சிரமமானதாகும். மேலும், மார்ஜின்கள் பொதுவாக வெளிப்படையானவையாக இருப்பதில்லை, அதாவது, லஞ்சம் கொடுப்பதற்காக நிதி தவறாகப் பயன்படுத்தப்படலாம். இந்தக் காரணத்திற்காக, வாடிக்கையாளரின் திட்டப்பணிகள் அல்லது வணிகத்தை உருவாக்க அல்லது வெல்ல ஆலோசகர்களை ஈடுபடுத்துவது Exyte-இல் தடை செய்யப்பட்டுள்ளது. திட்டப்பணியின் அளவு, செலவீட்டுத் திட்டம் அல்லது வேறு ஏதாவது சூழ்நிலைகள் ஆகியவற்றைக் கருத்தில் கொள்ளாமல் இந்தப் பொதுவான தடை எல்லாவற்றிற்கும் பொருந்தும். ஒரு பொதுவான கொள்கையாக, ஆலோசகர்களைப் பயன்படுத்துவதைக் கட்டுப்படுத்துவதை நாங்கள் நோக்கமாகக் கொண்டுள்ளோம். நாங்கள் விதிவிலக்கான நிகழ்வுகளில் மட்டுமே ஆலோசகர்களைப் பயன்படுத்துகிறோம், இது எப்பொழுதும் Exyte Consultancy Policy உடன் கடுமையான Compliance கொண்டதாக உள்ளது.

மேலும் படிக்கவும்: Consultancy Policy

## 7.5 நன்கொடைகள் மற்றும் நிதியாதரவுக்கான விதிகள்

ஒரு சிறந்த கார்ப்பரேட் குடிமகனாக, Exyte நமது சமூகங்களில் அறச் சிந்தனையுள்ள, இலாப நோக்கற்ற நிறுவனங்களையும் முயற்சிகளையும் ஆதரிக்கின்றது. இருப்பினும், ஒரு நன்கொடை அல்லது நிதியாதரவு ஓர் அறச் சிந்தனை நோக்கத்திற்காக அளிக்கப்பட்டிருந்தாலும் கூட, அது இலஞ்சமாகவும் இருக்கலாம். ஒப்பிடக்கூடிய நன்மைகளைப் பெற தவறான செல்வாக்குச் செலுத்தும் உணர்வைத் தவிர்க்க, நமது வணிகத்தில் ஈடுபட்டுள்ள அல்லது வணிகத்திற்கு நெருக்கமான எவருக்கும் நன்கொடைகள் அல்லது நிதியாதரவு அளிக்கக் கூடாது. அனைத்து நன்கொடைகளுக்கும் நிதியாதரவுக்கும் அந்தச் செலவை மேற்கொள்வதற்கு முன் Exyte இலஞ்ச எதிர்ப்புக் கொள்கைக்கு இணங்க அனுமதி பெறப்பட வேண்டும்.

மேலும் படிக்கவும்: Anti-Bribery and Corruption Policy



# 08 | நிதிசார் பதிவுகளின் மோசடி மற்றும் நேர்மை

மோசடி நமது நிறுவனத்தின் மீது பேரழிவு தரும் விளைவுகளை ஏற்படுத்தும், இது நிதி இழப்புகளுக்கு வழிவகுக்கும் அல்லது Exyte-இன் நற்பெயரையும் நமது பங்குதாரர்களின் நம்பிக்கையையும் சேதப்படுத்தும். அது பல முகங்களைக் கொண்டுள்ளது, இவை அனைத்திலும் நிதி அறிக்கைகள் அல்லது வணிகப் பரிவர்த்தனைகள் வேண்டுமென்றே தவறாகச் சித்தரிக்கப்பட்டுள்ளன. இது நிறுவனத்திற்குத் தனிப்பட்ட நன்மையையோ அல்லது இலாபத்தையோ தராவிட்டாலும் கூட இது தவறானது என்பதைக் கவனத்தில் கொள்ளவும். நேர்மைக்கான எங்கள் பொறுப்பில், திறமையான கட்டுப்பாடுகள் மூலம் மோசடியைத் தடுக்கிறோம் மற்றும் செயல்திறமிக்க பிரச்சனை ஏற்படுவதற்கான முதல் அறிகுறி தென்படும்போதே உடனடி நடவடிக்கை எடுக்கிறோம்.

நான்கு கண்கள் கொள்கை என்பது நமது மிக முக்கியமான கட்டுப்பாடுகளில் ஒன்றாகும், இது அனைத்து வணிகப் பரிவர்த்தனைகளுக்கும் முக்கிய முடிவுகளுக்கும் பொருந்தக்கூடியது. இதற்கு சம்பந்தப்பட்ட பரிவர்த்தனையில் ஈடுபட்ட இரண்டு அங்கீகரிக்கப்பட்ட பணியாளர்களின் சுயாதீன மதிப்பீடு மற்றும் கட்டுப்பாடு தேவைப்படுகின்றது. Exyte-இன் உள் விதிமுறைகளின்படி எழுத்துப்பூர்வ வெளிப்புறத் தொடர்புக்கு பொதுவாக அங்கீகாரம் பெற்ற இரண்டு கையொப்பங்கள் தேவை.

துல்லியம் மற்றும் வெளிப்படைத்தன்மை ஆகியவை நமது வெளிப்புற நிதிசார் தகவல் அளித்தலுக்கு மிக முக்கியமாகும். நமது காலமுறை நிதி அறிக்கைகளை உரிய நேரத்தில், தேசிய மற்றும் சர்வதேச கணக்குப்பதிவு விதிமுறைகளுக்கு இணங்க வெளியிடுகிறோம். ஏதேனும் ஒழுங்கின்மைகள் நிறுவனத்தின் மீதும், அத்தகைய ஒழுங்கின்மைகளுக்குப் பொறுப்புள்ள பணியாளர்களின் மீதும் கடுமையான விளைவுகளை ஏற்படுத்தக்கூடும்.

துல்லியமான மற்றும் வெளிப்படையான நிதிப் பதிவுகளைப் பராமரிக்க வேண்டிய தேவை Exyte-இன் நிதிசார் கணக்குகளுக்கான அடிப்படையைக் கட்டமைக்கின்ற அனைத்து உள் நிதிசார் தரவுகளுக்கும் விரிவடைகிறது. அதே போல, வணிகத் தரவுகளும் திட்டப்பணி புள்ளிவிவரங்களும் துல்லியமானதாகவும் நடப்பியலானதாகவும் இருப்பதை உறுதிசெய்ய அதைக் கவனித்துக்கொள்ளும் பொறுப்பு திட்டப்பணிக் குழுவின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் உள்ளது.

## நாங்கள் அளிக்கும் தகவல் **›› துல்லியமானது மற்றும் ஒளிவுமறைவற்றது.**



## உதாரணம்

நீங்கள் ஒரு மேலாளராகப் பணிபுரிகிறீர்கள், உங்கள் அணியில் உள்ள ஒரு புதிய உறுப்பினருக்கு இன்னும் IT உபகரணம் வழங்கப்படாததால் அவருக்கு அவசரமாக ஒரு மடிக்கணினி தேவைப்படுகின்றது. அகக் கொள்முதல்செயல்முறைமிகமெதுவாகநடைபெறலாம் என நீங்கள் கவலைப்படுவதால், உங்கள் கிரெடிட் கார்டை உபயோகித்து அதை வாங்கிக்கொண்டு அதற்கான செலவுகளை நிறுவனத்திடம் பயணச் செலவாக வசூலித்துக் கொள்ளலாம் என நினைக்கிறீர்கள். அது நமது அகக் கொள்கைகளுக்கு இணக்கமானதாக இருக்காது என்பதையும், அது தவறான நிதி அறிக்கை அளித்தலுக்கு வழிவகுக்கும் என்பதையும் பின்னர் நீங்கள் உணர்கிறீர்கள். இதைப் பற்றி உங்கள் அணியுடன் விவாதித்து ஒரு மாற்று இடைக்காலத் தீர்வைக் காண்கிறீர்கள்.

# 09 | நியாயமான விதிமுறைகளின் அடிப்படையில் போட்டியிடவும்

Exyte-இல், நியாயமான, சட்டப்பூர்வ மற்றும் வெளிப்படையான போட்டியின் மீது நாங்கள் நம்பிக்கை கொண்டுள்ளோம். Exyte-இன் வெற்றி நமது பணியாளர்களையும், நமது சேவைகள் மற்றும் தயாரிப்புப் பொருள்களின் தலைசிறந்த தரத்தையும், வாடிக்கையாளரை மையப்படுத்திய நமது நடவடிக்கைகளையும் சார்ந்துள்ளது. போட்டிச் சட்டங்களை நாங்கள் எப்போதும் கடைபிடிப்போம். மேலும், இரகசிய உடன்படிக்கைகள் மற்றும் போட்டியாளர்களுடன் கூட்டாகச் செயலாற்றுதல் ஆகியவற்றின் மூலம் நமது வாடிக்கையாளர்களின் நம்பிக்கைக்கு ஒருபோதும் ஆபத்து ஏற்படுத்த மாட்டோம். ஒப்பந்தப்புள்ளிகளில் நமது நடத்தையை ஒருங்கிணைப்பதன் மூலம் அல்லது போட்டியாளர்களுடன் சேர்ந்து இரகசிய விலை நிர்ணயத்தில் ஈடுபடுவதன் மூலம் விலைகள் அல்லது பிற வணிக விதிமுறைகள் மற்றும் உத்திகள் தொடர்பாக மூன்றாம் தரப்பினருடன் எந்த விதமான போட்டிக்கு எதிரான ஒப்பந்தத்திலும் நாங்கள் ஈடுபடுவதில்லை. இது முறையான ஒப்பந்தங்களுக்கு மட்டுமல்லாமல், போட்டியைக் கட்டுப்படுத்தக்கூடிய எந்தவொரு முறைசாரா ஒப்பந்தத்திற்கும் பொருந்தக்கூடியதாகும். போட்டியாளர்களிடையே வணிக ரீதியான இரகசியத் தரவுகளின் பரிமாற்றம் தடை செய்யப்பட்டுள்ளதால், போட்டிக்கான எதிர்ப்பு நோக்கம் எதுவாக இருந்தாலும் தகவல்களைப் பெறுவது அல்லது வெளிப்படுத்துவது கூட போட்டிச் சட்டங்களை மீறுவதாக இருக்கலாம்.

வணிக ரீதியான இரகசியத் தரவைப் பற்றி விவாதிக்க, அல்லது நமது வணிகக் கூட்டாளர்களுக்கான விலைகள் அல்லது விதிமுறைகளைப் பாதிக்கக்கூடிய ஏற்பாடுகளைச் செய்ய ஏதேனும் போட்டியாளர் உங்களை அணுகினால், நீங்கள் அத்தகைய விவாதங்கள் அல்லது ஏற்பாடுகளில் ஈடுபடத் திட்டவட்டமாக மறுத்துவிட வேண்டும் மற்றும் அந்தச் சம்பவம் குறித்து Exyte Compliance Team-இன் உறுப்பினர் ஒருவரிடம் தகவல் அளிக்க வேண்டும்.

## நாங்கள் நியாயமான விதிமுறைகளின் **›› அடிப்படையில் போட்டியிடுகிறோம்.**



**உதாரணம்**

ஒரு கட்டமைப்பு அமைத்தலுக்கான நிகழ்ச்சியில், எதிர்காலத்தில் குறிப்பிட்ட சில திட்டப்பணிகளில் ஒருவர் மற்றவருக்கு எதிராக ஏலம் கேட்பதைத் தவிர்ப்பது பரஸ்பரம் உங்கள் நிறுவனங்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும் என ஒரு போட்டியாளர் சாதாரணமாகக் குறிப்பிடுகிறார். Exyte எந்த வடிவிலான போட்டிக்கு எதிரான உடன்படிக்கைகளிலும் ஈடுபடுவதில்லை என நீங்கள் தெளிவாகக் குறிப்பிடுகிறீர்கள். நீங்கள் இந்த விஷயத்தை மேற்கொண்டு விவாதிக்க மறுத்துவிடுகிறீர்கள் மற்றும் இந்தச் சம்பவம் குறித்து Compliance அணியிடம் தகவல் அளிக்கிறீர்கள்.

# 10 | தடை நடவடிக்கைகள் மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாடு

Exyte-இல், ஏற்றுமதிக் கட்டுப்பாட்டின் முக்கியத்துவத்தை நாங்கள் உணர்ந்துள்ளோம், இது புலப்படும் பொருள்கள், மென்பொருள் மற்றும் தொழில்நுட்பம் உள்ளிட்ட பொருள்களின் ஏற்றுமதி அல்லது பரிமாற்றம் மீதான கட்டுப்பாடுகளை உள்ளடக்கியதாகும். அத்தகைய கட்டுப்பாடுகள் எந்தவொரு நிகழ்விலும் ஆயுதங்கள் மற்றும் இராணுவப் பொருள்களுக்குப் பொருந்தும் என்றாலும், குடிமுறை மற்றும் இராணுவ நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படுகின்ற மற்றும் பல உயர் தொழில்நுட்பப் பயன்பாடுகளின் ஓர் அங்கமாக விளங்குகின்ற dual-use பொருள்களின் மீது குறிப்பிட்ட கவனம் தேவைப்படுகின்றது. தேசிய மற்றும் உலகளாவிய பாதுகாப்பு நோக்கங்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் அவற்றைப் பயன்படுத்துவதைத் தடுப்பது முக்கியமாகும்.

உலகளவில் பல திட்டப்பணிகளையும் நிறுவனங்களையும் கொண்ட ஓர் உலகளாவிய நிறுவனமாக, Exyte ஆனது ஏற்றுமதி கட்டுப்பாட்டு விதிமுறைகளாலும் அவற்றின் தொடர்புடைய வரையறைகள் மற்றும் கட்டுப்பாட்டு நடைமுறைகளாலும் நேரடியாகப் பாதிக்கப்படுகின்றது. Exyte-இன் Export Control Policy அனைத்துத் தொடர்புடைய ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுச் சட்டங்கள் மற்றும் விதிமுறைகளுக்கு இணங்கச் செயல்படுவதை உறுதிசெய்யவும், நமது செயல்பாடுகள் அங்கீகாரமற்ற அல்லது தீங்கிழைக்கும் நடவடிக்கைகளுக்குப் பங்களிக்காமல் இருப்பதைக் காத்துப் பேணவும் ஒரு வலுவான கட்டமைப்பை நிறுவியுள்ளது.

## செயல்படுவதற்கு முன்
## » விதிகளைப் பற்றித் தெரிந்துகொள்வதன் மூலம் நிறுவனத்தை நாங்கள் பாதுகாக்கிறோம்.




### உதாரணம்

உங்கள் வாடிக்கையாளருக்காக நாம் உருவாக்கும் உபகரணத்தில் ஒரு புதிய வகை வால்வைப் பயன்படுத்துமாறு அவர் உங்களைக் கேட்கிறார். ஒரு எளிய வால்வு பொருத்தமானதாக இருக்காது என ஆரம்பத்தில் நீங்கள் நினைத்தாலும், அந்தச் சூழ்நிலை பற்றி ஆராயுமாறு உங்கள் Export Control Officer-ஐக் கேட்கலாம் என இறுதியில் நீங்கள் தீர்மானிக்கிறீர்கள். அந்த வால்வு ஓர் dual-use பொருள் என்பதை நீங்கள் உணரும்போது, சரியான நேரத்தில் ஆலோசனையைப் பெற நினைத்ததில் பற்றி நீங்கள் மகிழ்ச்சியடைகிறீர்கள்.

# 11| CODE OF CONDUCT-ஐ அமல்படுத்தவும்

Exyte-இல் Compliance என்பது பரிசுகளுக்கான உச்ச வரம்பை அறிந்துகொள்வது அல்லது வருடம் ஒரு முறை கட்டாய இணக்கப் பயிற்சி பெறுவதற்கும் மேலானது. Compliance ஒரு மனப்பான்மையாக உள்ள மற்றும் நமது விதிகளும் நடைமுறைகளும் நமது வணிகச் செயல்முறைகளில் உட்பொதிக்கப்பட்டுள்ள இணக்கக் கலாச்சாரத்திற்காக நாங்கள் பாடுபடுகிறோம்.

Exyte-க்காகப் பணிபுரியும் அனைவரும் இந்த Code of Conduct-இன் கருத்துகளைப் புரிந்துகொள்ள வேண்டும் எனவும், தங்கள் வேலை நடைமுறையின் ஓர் அங்கமாக அவற்றைப் பயன்படுத்த வேண்டும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. சந்தேகம் எழும்போது ஆலோசனை கோருங்கள், ஏதோ தவறு உள்ளது என நீங்கள் கருதினால் அதைப் பற்றித் தகவல் அளியுங்கள்.

மேலாளர்கள் Exyte-இல் Compliance-இன் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்ற மற்றும் நேர்மையைப் பொறுத்து முன்மாதிரியாகச் செயல்படுகின்ற கூடுதல் பொறுப்பைக் கொண்டுள்ளனர்.

## Compliance கலாச்சாரம் என்பது ஒவ்வொருவரும் உடையுரிமை எடுத்துக்கொள்வதால் மட்டுமே

## **» அடைய முடிகின்ற ஒரு கூட்டுமுயற்சி ஆகும்.**



தங்கள் பொறுப்பிற்குரிய பகுதியில்
**» Compliance-ஐ உறுதிசெய்வது அனைத்து மேலாளர்களின் பொறுப்பாகும்.**

# Speak Up!

It's the right way

# உங்கள் தொடர்பு விருப்புரிமைகள்:

» **Dr. Steffen Liebendörfer**
Vice President Compliance
Exyte Management GmbH
70376 Stuttgart
Germany
ஃபோன்: +49 711 8804-1045
steffen.liebendoerfer@exyte.net

» ethics@exyte.net

» www.speak-up.exyte.net

exyte

# தொழில்நுட்பத்தின் எதிர்காலத்தை உயிர்ப்பிக்கும்

COMPLIANCE
» The right way « exyte

03/2025 ta

exyte.net

